இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 20 ஜூன் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| திட்டத்தின் இலக்கம் | 49365-002 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | முன்மொழியப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன் |
| நிதியிடல் மூலம்/ தொகை | **கடன்: மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**<br>சாதாரண மூலதன வழங்கள் US$ 250.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுத் தீர்வுகள்<br>பங்குடமைகள்<br>தனியார்துறை மேம்பாடு |
| துறை / உபதுறை | **நிதி** – பணம் மற்றும் மூலதனச் சந்தைகள் |
| பால் சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | பால் மூலகங்கள் இல்லை |
| விவரணம் | முன்மொழியப்பட்ட மூலதனச் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (CMDP) குறிப்பிட்ட குறிக்கோள் ஒரு வலுவான சட்டம் மற்றும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்ட மூலதனச் சந்தையின் மேம்பட்ட திறன் மற்றும் அளவு ஆகும். இந்த CMDP ஆனது, 2016 இன் இரண்டாம் காலாண்டில் சபையினால் ஒப்புதல் அளிக்கப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப் பட்டிருக்கின்றது. |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பும் | பொருளாதாரத்தின் பெரும் நிதியிடற் தேவைகள் இருந்தபோதும், குறிப்பாக சேமிப்புகளை முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு உறுதுணையாக திசைதிருப்பி விடுவதில் இலங்கையில் மூலதனச் சந்தைகள் செயலூக்கமுள்ளனவாக இல்லை. தனியார்த்துறைக்கான வங்கிக் கடனின் ஆண்டு அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1% (தேசிய சேமிப்புகளின் 25.4%) ஆக இருந்த அதேவேளை, வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் பிணைமுறிகள் ஊடாகத் தனியார்த்துறையினால் ஒருசேரத் திரட்டப்பட்ட |

| | |
|---|---|
| | மூலதனம் 2014 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.7%ற்கு சமனானதாக இருந்தது. பொருளாதாரமும் வங்கி நிதியிடலில் அதிகம் சார்ந்துள்ளது (மொத்த வங்கிச் சொத்துக்களின் 60% நாட்டின் நிதியிடல் சொத்துக்களாகும்), அது வங்கியினை முதிர்ச்சிப் பொருத்தமின்மை பிரச்சினைகள் போன்ற கடன் அபாயங்களுக்கு வங்கியினை வெளிப்படுத்தும் என்பதனால் இது நாட்டிற்குத் தேவையான உட்கட்டுமான முதலீடுகளிற்கு நிதியிட முடியாத நிலையில் இருக்கின்றது. கூட்டு நிறுவன உண்டியற் சந்தை, நீண்டகால உட்கட்டுமான நிதியிடற் தேவைகளைத் தகர்த்து, முழு வளர்ச்சியடையாத நிலையில் உள்ளது. மொத்தக் கூட்டு நிறுவன உண்டியற் சந்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2% மட்டுமே, இது பிற நடுத்தர வருமானம் பெறும் ஆசிய நாடுகளை விட கணிசமான அளவு குறைவானதாக இருக்கின்றது. காப்புறுதிக் கம்பனிகள், அத்துடன் ஓய்வூதிய நிதியங்கள் (குறிப்பாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்) அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றன, இது ஒரு நம்பகமான அரச ஈட்ட வளையி மற்றும் திரவ பிணையச் சந்தை உருவாவதனைத் தடை செய்கின்றது. ஒட்டுமொத்த சந்தை வளர்ச்சி (முக்கியமான சந்தை உட்கட்டுமானங்கள் உள்ளடங்களாக) மற்றும் பரிமாற்றங்களை ஆட்சி செய்தலைவிட தமது வியாபாரங்களை முன்னுரிமையாகக்கொண்ட தரகர்களால் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது உரிமை கொள்ளப்படுகிறது அத்துடன் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ளது. |
| தாக்கம் | அடிப்படை மூலதன மற்றும் முதலீட்டுத் தேவைகளை ஆதரிக்கின்ற நன்கு செயற்படும் நிதி முறைமை, அத்துடன் இலங்கையின் நீண்டகால பொருளாதார குறிக்கோள்கள். |
| விளைவு | மூலதனச் சந்தையின் கொள்திறன் மற்றும் அளவு மேம்படுத்தப்படல் |
| வருவிளைவுகள் | மேம்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு<br><br>பிணைமுறிச் சந்தை மேம்படுத்தப்படல்<br><br>நிதிக்கருவி வரிக் கொள்கைகள் மேம்படுத்தப்படல்<br><br>கிளைப் பொருட்களுக்கு சக்தியளிக்கும் சூழல் மேம்படுத்தப்படல்<br><br>காப்புறுதித் துறை மற்றும் ஓய்வூதியத் துறை மேம்படுத்தப்படல் |
| பூகோளம்சார் அமைவிடம் | |

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | C |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | C |
| சுதேச மக்கள் | C |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| |
|---|
| சுற்றுச்சூழல் சார்ந்த பார்வைகள் |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் |
| சுதேச மக்கள் |
| **பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை** |
| திட்ட வடிவமைப்பின் போது |
| திட்ட அமுலாக்கத்தின் போது |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| கொள்வனவு | இந்தத் திட்டத்தின் கீழ் எந்த பாரிய மரபுவழி கொள்வனவும் எதிர்பார்க்கப்படவில்லை. SAPF இன் வகை B கொள்வனவு வகைப்படுத்தலுடன் உடன்படுகின்றது. |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | சயிட் ஷா |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி திணைக்களம் | தெற்கு ஆசிய திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | பொது முகாமைத்துவ, நிதித் துறை மற்றும் வணிகப் பிரிவு, தெற்கு ஆசியப் பிராந்தியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **நிதித் திட்டமிடல் அமைச்சு,**<br>த. பெ. இல. 277<br>செயலகக் கட்டடம், கொழும்பு 1<br>இலங்கை<br><br>**தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு**<br>“மிலோடா” (பழைய Times கட்டடம்), 1ஆம் மாடி,<br>பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1 |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 29 ஏப்பிரல் 2016 |
| உண்மை அறிதல் | 06 ஜுன் 2016 முதல் 06 ஜுலை 2016 வரை |
| எம்ஆர்எம் | 06 ஜுலை 2016 |
| ஒப்புதல் | 29 செப்டம்பர் 2016 |
| இறுதி மீளாய்வுப் பணி | - |
| இறுதி PDS மேம்படுத்துகை | 26 ஏப்பிரல் 2016 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: ஏனெனில், பீடீஎஸ் ஆனது ஒரு செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அவை கிடைக்கும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஏடிபி இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிதத்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.